# 24

# இணையவழித் தமிழ்க் கல்வி

**முனைவர் மு. பொன்னவைக்கோ**

*இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்*
*சென்னை 600 113.*

## 1. முன்னுரை

ஒரு குவலயக் குடும்பமாக தமிழர்கள் உலகு தழுவி 90க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ் மக்கள் ஒரு மொழியினராயினும் பல நாட்டினராக எல்லா நாடுகளிலும் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள். அப்படி உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள் தங்களுடைய மரபுகளையும் விழுமியங்களையும், பண்பாட்டையும் பாதுகாக்கவேண்டும் என்ற வேட்கை உடையவர் களாக இருக்கின்றார்கள். இத்தகைய தேவையை நிறைவேற்ற அவர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம் இவற்றோடு தொடர்பு நீங்காது வாழ ஒரு வழி வகை செய்யும் முகத்தான் தமிழ் இணையப் பல்கலைக்கழகம். தமிழக அரசால் உருவாக்கப் பட்டிருக்கிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களாவன:

## 2. குறிக்கோள்கள்

- உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும், தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.
- பார் தழுவி வாழும் தமிழர்கட்கு, அவர்கள் தேவைக்கேற்பப் பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல்: அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புகொண்டு வாழத் துணைபுரிதல்.
- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து, அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.
- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத் திட்டங்களை வகுத்தல்: கேள்வியறிவுக் காகவோ, அல்லது சான்றிதழ், பட்டயம், பட்டம் பெறுவதற்காகவோ கற்போருக்கு இப்பாடங் களைக் கற்க வாய்ப்பளித்தல்: உரிய நியமங்களை நிறைவு செய்தோருக்கு, அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கு ஏற்ப, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ்/பட்டயம்/ பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

உலகு தழுவி வாழும் தமிழ் மக்களின் கல்வித் தேவை, தொடக்க நிலையிலிருந்து ஆய்வு நிலை வரை பல்வேறு நிலைகளில் உள்ளது. இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் முதன்மைப் பணியாக கல்வி வழங்கும் திட்டமும், மின் நூலகம் அமைக்கும் திட்டமும் உள்ளன.

## 3. கல்வித் திட்டம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டம் தமிழ்க் கல்வியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை வழங்க வழி செய்கின்றது. இப்போதைக்கு, கல்வித் திட்டம் கீழ்க்காணும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(1) தொடக்கக் கல்வி (2) உயர் கல்வி (3) பிற இணையவழிக்கல்வி

### 3.1 தொடக்கக் கல்வி

தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தின் கீழ் தமிழகப் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் தமிழ் மொழிப் பாடத் திறன்களைக் கீழ்க்காணும் தகுதி நிலைகளில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. மழலைக் கல்வி
2.. சன்றிதழ்க் கல்வி (1 – 6 ஆம் வகுப்பு வரை)
3. மேற்சான்றிதழ் – நிலை 1 (7, 8 வகுப்புகள்)
4. மேற்சான்றிதழ் – நிலை 1 (9, 10 வகுப்புகள்)
5. மேற்சான்றிதழ் – நிலை 1 (11, 12 வகுப்புகள்)

#### 3.1.1 மழலைக் கல்வி

இக்கல்வித் திட்டத்தின் நோக்கம் குழந்தைகளை கேட்டுக் கற்றலின் மூலம் அவர்களுக்கு தமிழில் பேசும் திறனை வளர்த்தலாகும். இதில் பாடல்கள், கதைகள், வழக்குச் சொற்கள், நிகழ்ச்சிகள், உரையாடல், விளங்கு பெயர்கள் மற்றும் எழுத்துகள் ஆகியன பயிற்சிகளுடன் பல்லூடக வழிகளைப் பயன்படுத்தி அசைவுப் படங்களுடன், படிப்பவர்களை ஆர்வம் ஊட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதியுடன் பல அறநெறிக் கதைகளும் மழலைப் பாடல்களும் அசைவுப் படங்களாக வழங்கப்பட்டுள்ளன.

#### 3.1.2 சான்றிதழ்க்கல்வி

1 முதல் 6–ஆம் வகுப்புவரைக்கான பாடத்திறன்கள் சான்றிதழ் கல்வியாக வழங்கப்படுகின்றது. சான்றிதழ்க் கல்விக்கான பாடங்கள் கீழ்க்காணும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன.

(i) அடிப்படை நிலை (ii) இடை நிலை (iii) மேல் நிலை

**(i) அடிப்படை நிலை**

அடிப்படை நிலையில் தமிழ் எழுத்துகள் யாவும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. எழுத்துகளின் ஒலி, வரிவடிவங்கள் பயின்று எழுதிப்படிக்கும் வகையில் பயிற்சிகளுடன் பாடங்கள் தரப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதியில், 14 பாடங்கள் உள்ளன. அவை எளிய வரிவடிவம் கொண்ட எழுத்துகளில் தொடங்கி, கடின வரிவடிவம் கொண்ட எழுத்துகளில் முடியுமாறு அத்தனை எழுத்துகளையும் ஒத்த வடிவம் கொண்ட எழுத்துகளின் தொகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு தொகுதியும் ஒரு பாடமாக கொடுக்கப்பட்டுள்ளது. 13–வது பாடத்தில் தமிழ் எழுத்துகளின் அகரவரிசை அறிமுகப்படுத்தப்படு கின்றது. இறுதியில் 16 மழலைப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிக்கான பாடங்கள் முழுதும் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன.

**(ii) இடைநிலை**

இடைநிலையில் பயில்வோர், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் உரையாடுதல், இலக்கணக் கூறுகள் போன்ற மொழித் திறன்களைப் பெறுகின்ற வகையில், 20 பாடங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த 20 பாடங்களும் இணைய வடிவமைக்கப்பட்டு உள்ளன. சில பாடங்கள் ஏற்கனவே தளத்தில் இடப்பட்டுள்ளன.

**(iii) மேல் நிலை**

மேல்நிலையில் பயில்வோர், அறிவியல் கட்டுரை, கலந்துரையாடல், வருணனை, கவிதைகள், செய்தி வெளியிடல், சிறுகதை, இலக்கியக் கட்டுரை, நாடகம், பயணக் கட்டுரை போன்ற இலக்கிய, இலக்கண, மொழித்திறன்களைப் பெறும் வகையில் 18 வகையில் 18 பாடங்களாக வடிவமைக்கப் பட்டுள்ளன. இப்பாடங்களின் பெரும்பகுதி எழுதி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவை சரி பார்க்கப்பட்டு வருகின்றன.

### 3.1.3 மேற்சான்றிதழ்க் கல்வி (மூன்று நிலைகளில்)

7 முதல் 12–ஆம் வகுப்பு வரைக்கான பாடத் திறன்கள் மேற்சான்றிதழ் நிலை–1, 2, 3 என மூன்று நிலைகளில் வழங்கப்படவுள்ளன. இப்பாடத்திட்டங்கள் இன்னும் வகுத்தமைக்க வேண்டிய நிலையில் உள்ளன.

தொடக்கநிலைக் கல்விப் பாடங்கள், குறிப்பாக அடிப்படைப் பாடங்கள் ஆங்கிலம், ஃபிரஞ்சு, ஜெர்மன், இந்தி போன்ற பல பிற மொழிச் சூழல்களில் வாழும் குழந்தைகளுக்கு ஏற்றவாறு அமைத்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போதைக்கு இவை ஆங்கில மொழிச் சூழலில் வாழும் குழந்தைகளுக்காக வழங்கப்படுகின்றன. தொடக்க நிலைக் கல்விக்கான பாடங்கள், கணிப்பொறியின் பல்லூடக (multimedia) வசதிகளைப் பயன்படுத்தி அச்சு வடிவம், ஒலி வடிவம், ஒளி வடிவம் ஆகியவற்றின் வாயிலாக மிகவும் ஆர்வமூட்டுகின்ற வகையில் எளிய இனிய முறையில் படிக்கத் திகட்டாமல் விறுவிறுப்பு ஊட்டுபவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கசடறக் கற்க, கற்றதைத் தாமே சோதித்து, கற்ற நிலை அறியக் கூடிய வகையில் பாடங்கள் தன்மதிப்பீட்டுச் சோதனைகளுடன் அமைக்கப் பட்டுள்ளன.

## 3.2 உயர்கல்வி

உயர்கல்விப் பாடத் திட்டத்தின்கீழ், தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு, கலைகள் ஆகியவை அறிமுக நிலையில் தொடங்கி ஆய்வு நிலை வரை பல்வேறு பாடத் தொகுதிகளாக வகுத்தமைக்கப் பட்டுள்ளன. இப்பாடத் திட்டம் இளநிலை (தமிழியல்), முதுநிலை (தமிழியல்), ஆய்வுப் படிப்பு போன்ற கல்வித் திட்டங்களைக் கொண்டுள்ளது.

இளநிலை (தமிழியல்) படிப்பிற்கான பாடங்கள் பட்டயம், மேற்பட்டயம், பட்டம் ஆகிய மூன்று பாடத் திட்டங்களாக ஒருங்கிணைப்புப் பாடத் திட்ட முறையில் (Integrated Credit Scheme) வடிவமைக்கப் பட்டுள்ளன இப்பாடங்கள் எழுத்து, ஒலி, ஒளி வடிவங்களைக் கொண்ட பல்லூடக அமைப்பில் தானாகக் கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் பொது விளக்கங்கள் மற்றும் பாடச் சுருக்கங்கள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒலி வடிவிலும் எழுத்து வடிவிலும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடத்தின் கருத்துகளும், செய்திகளும் படங்கள், அசைவூட்டப் படங்கள், ஒலி–ஒளிக் காட்சிகள் ஆகிய வற்றைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பாட இறுதியில் அப்பாடக் கருத்து பற்றிய ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஒலி–ஒளிக் காட்சியாக இடம்பெறுகின்றது. இப்பாடங் களைப் படிப்போர், தான் கற்ற நிலையை சோதித்தறிய தன்மதிப்பீட்டு வினாக்களும் கொடுக்கப் பட்டுள்ளன. இப்பாடங்களுக்குப் பதிவு செய்யும் மாணவர்கள் பாட ஆசிரியருடன் இணைய வழித் தொடர்பு கொண்டு ஐயங்களைப் போக்கிக்கொள்ள மின்னஞ்சல், மின்னுரையாடல் போன்ற வசதிகளும் செய்யப்படவுள்ளன.

இளநிலை (தமிழியல்) பட்டப் படிப்பில் பகுதி 1, பகுதி 2, பகுதி 3 என மூன்று பகுதிகள் உள்ளன. ஏதேனும் ஒரு துறையில் ஏற்கப்பட்ட கல்லூரி/பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுள்ள மாணவர் களுக்கு முதலிரு பகுதிகள் விதிவிலக்கு அளிக்கப்பட்டுகின்றன. பகுதி–1இல் 4 தாள்களும், பகுதி – 2இல் 4 தாள்களும், பகுதி –3இல் 21 தாள்களும் உள்ளன. ஒவ்வொரு தாளும் நான்கு தொகுதிகளையும் ஒவ்வொரு தொகுதியும் 6 பாடங்களையும் கொண்டவையாக இப்பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 696 பாடங்களில் 300 பாடங்கள் எழுதி முடிக்கப்பட்டுள்ளன. 100 பாடங்கள் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன.

முதுநிலை (தமிழியல்) பாடத் திட்டம் வகுத்தமைக்கப்பட்டுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இசைவோடு இப்பாடத் திட்டம் விரைவில் இணையவழி வழங்கப்படும்.

### 3.3 பிற இணையவழிக் கல்வி

தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையத் தளத்தில் பேச்சுத் தமிழ்ப் பாடங்கள், பயணியர் தமிழ் கற்க உதவும் எளிய பாடங்கள், இசைக் கலை, நாட்டியக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, போன்ற சிறப்புப் பாடங்கள் பலவும், தேவைக்கேற்ப வடிவமைத்து இணையவழி வழங்கத் திட்டங்கள் உள்ளன.

## 4. மின் நூலகம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகத்தில் இலக்கிய நூல்கள், அகராதிகள், பண் பாட்டு நிகழ்ச்சிகள், கலைச் சொற்கள் பிற இணையத் தளங்களுக்குரிய இணைப்புகள் போன்ற பல பகுதிகள் இடம் பெறுகின்றன.

### 4.1 இலக்கிய நூல்கள்

சங்ககாலம் தொட்டு இன்றுவரை எழுதப்பட்டுள்ள இலக்கிய நூல்கள் அனைத்தும் இணைய தளத்தில் இடம்பெற உள்ளன. சங்க இலக்கிய நூல்களுக்கு உரைகளும் அவற்றின் பிற மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப்படுகின்றன. இப்போதைக்கு சங்ககாலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட நூல்களில் தேர்வு செய்யப்பட்ட 84778 பக்கங்களைக் கொண்ட 182 நூல்கள் இணையத்தில் இடப் பட்டுள்ளன. 62694 பக்கங்களைக் கொண்ட 173 நூல்கள் மெய்ப்புத் திருத்தப்பட்டு வருகின்றன. அவை விரைவில் தளத்தில் இடப்படும். சங்க இலக்கிய நூல்களுக்கு மின்நூலகத்தின் சிறப்புக்கூறாக பாடுபொருள்களை தேடிப்பெறுகின்ற வகையில் நூல்பொருள் அகராதிகளும் தேடுபொறி வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் ஆங்கில எழுத்து வடிவங்களைக் கொண்ட Roman Script முறையிலும் கொடுக்கப்படுகின்றன.

### 4.2 அகராதிகள்

மின்நூலகத்தில் தமிழ்–தமிழ், தமிழ்–பிற மொழி, பிற மொழி–தமிழ் என்ற பல வகையான அகராதிகள் இடம்பெற உள்ளன. இப்போதைக்கு தமிழ்–தமிழ்–ஆங்கில அகராதியாகிய சென்னை பல்கலைக்கழகத் தின் பேரகராதி (Lexicon), 'Palanniappa Brothers' நிறுவனத்தாரின் ஆங்கில–தமிழ் Pals அகராதி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில–தமிழ் அகராதி பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர் களின் தமிழ்–தமிழ் அகராதி ஆகியவை இணையத் தில் இடம்பெற்றுள்ளன.

### 4.3 பண்பாட்டு நிகழ்ச்சிகள்

இணையத் தளத்தில் சொல்லால் விளக்க இயலா பண்பாட்டு நிகழ்ச்சிகள் பல ஒலி–ஒளிக் காட்சி களாக நூலகத்தில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக இப்போதைக்கு அடலேறுதல் (ஜல்லிக்கட்டு), பரதநாட்டியம், நாதஸ்வர இசை, கரகாட்டம் போன்றவை இணையத் தளத்தில் சேர்க் கப்பட்டுள்ளன. இப்பகுதியில் 125 சைவ, வைணவக் கோயில்கள் ஒளிக்காட்சிகளாகவும், படக்காட்சி களாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.4 கலைச் சொற்கள்

இது வரை தமிழில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த 2,00,000–த்திற்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் இணையத்தளத்தில் இடப்பட்டுள்ளன. இந்தக் கலைச் சொற்களை எல்லாம் இணையத்தின் வழியாக உலக அறிஞர்களின் பார்வைக்கு வைத்து கலைச் சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணையோடு, கலைச் சொற்களைத் தரப்படுத்த அரசிற்கு துணைசெய்வதை இந்தத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு சேவையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

### 5. வளர்ச்சியும் வரவேற்பும்

இது வரை தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தை 90க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்தி வருகின்றனர். 40க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பட்டக் கல்வியில் சேர்ந்து பயின்று வருகின்றனர். 500க்கும் மேற்பட்ட நூலக உறுப்பினர்கள் உள்ளனர்.

### 5.1 தொடர்பு மையங்கள்

மாணவர்களை இனங்கண்டு இணையவழித் தேர்வுகளையும் நேர்முகத் தேர்வுகளையும் நடத்தவும், மாணவர்களை வழிநடத்தவும் உலக நாடுகளில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தொடர்பு மையங்கள் நிறுவவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முயற்சியில் இலங்கையில் Dana International Educational Pvt., Ltd., மொரிசியசில் மொரிசியஸ் தமிழ் பண்பாட்டு மையம், மலேசியாவில் TMI-Nusantara Consultants (M) Sdn Bhd., கலிபோர்னியாவில் கலிபோர்னியா தமிழ் கல்விக் கழகம், பிரிமான்ட்டில் சின்மையா பாலவிகார் தமிழ்ப் பள்ளி, நியூயார்க்கில் சிஸ்யா தமிழ்ப் பள்ளி, நியூஜெர்சியில் தமிழ்க் கலை பண்பாட்டு சங்கப் பள்ளி, பிலடல்பியாவில் டெலவர் பெருநிலத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பள்ளி ஆகிய நிறுவனங்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தொடர்பு மையங்களாக ஒப்பந்தம் செய்து செயல்பட்டு வருகின்றன.

### 5.2 அடிப்படை சான்றிதழ் பெற்ற முதல் மாணவர்கள்

இந்த ஆண்டு (2003) சூன் மாதம் 29–ஆம் நாள் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கலி போர்னியாவில் உள்ள கலிகோர்னிய தமிழ்க் கல்விக் கழகத்தைச் சார்ந்த 55 மாணவர்கள் சான்றிதழ்க் கல்வியின் அடிப்படை நிலைப் பாடங்களில் தேர்ச்சி பெற்று, முதன் முறையாக தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்களைப் பெற்றனர்.

### 5.3 உலக நிறுவனங்களின் ஏற்பு

கனடாவில் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள Commonwealth of Learning நிறுவனம் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களை ஏற்று, மலேசிய நாட்டில் 40 பள்ளி ஆசிரியர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பில் பயில வழி செய்யும் வகையில் ஒரு முன்னோடித் திட்டத்திற்கு இசைவு தந்து மூன்று ஆண்டுகளுக்கான மொத்த உதவித் தொகையாக Canadian $75000 வழங்க இசைவு தந்துள்ளார்கள். அமெரிக்காவில் உள்ள பெர்களி பல்கலைக் கழகமும், பென்சில்வேனியாலில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகமும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களைப் பெரிதும் பாராட்டி அப்பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இப்பாடத்தை பயன் படுத்திக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

### 6. முடிவுரை

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உலகு தழுவி வாழும் தமிழர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றது. எந்த ஒரு முன்மாதிரியும் இல்லாத நிலையில் இப்பல்கலைக்கழ கம் தொடங்கப்பட்டு இன்று ஒரு நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் பணி பயனர்களின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவேண்டு மெனில் பயனர்களின் கருத்துரைகள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும். இப்பல்கலைக்கழ கத்திற்கு இது வரை கிடைத்துள்ள ஊக்கத்தையும் வரவேற்பையும் நோக்கும்போது, இந்தப் பல்கலைக்கழகம் ஆல் போல் தழைத்து உலகெங்கிலும் தனது விழுதுகளை ஊன்றி ஓர் உலகத் தமிழ்க் கல்விக் கூடமாக மலரும் என்பதில் ஐயமில்லை.

போற்றுவீர் போற்றுவீர் புத்தமிழ் இணையப்
பல்கலைப் போற்றுவீர் !